# வெள்ளி விழா அழைப்பிதழ் – 2022

செப்டம்பர் 4 முதல் 8 முடிய



புனித ஆரோக்கிய அன்னை திருத்தலம்

தூத்தூர்

வெள்ளி விழா

8 செப்டம்பர் 1998 - 2022

**குமரியின் வேளாங்கண்ணி**

கேட்ட வரம் தரும்

## புனித ஆரோக்கிய அன்னை திருத்தலம், தூத்தூர்

அனைவரும் வருக!!
இறையாசீர் பெறுக!!

அன்பு நிறைந்த நெஞ்சங்களே...

அனைவருக்கும் பெருவிழா நல்வாழ்த்துகள்...

முக்கடலும் முத்தமிடும் குமரி மாவட்டத்தின் கடற்கரை மாதிரிக் கிராமமே தூத்தூர். குறிப்பாக, சுறாமீன் பிடிப்பதில் உலகளவில் புகழ் பெற்றவர்கள் வாழும் ஊர் இது. மேலும் தமிழகத்தின் கால்பந்தாட்ட கிராமம் என்றும் அழைக்கப்படுகிறது.



இங்கு, இயேசு கிறிஸ்துவின் பன்னிரு சீடர்களில் ஒருவரான புனித தோமையாருக்கு ஆலயம் கட்டப்பட்டுள்ளது. இதுவே இப்பகுதியின் உயர்மறைவட்ட முதன்மை ஆலயமுமாகும். மேலும், இந்தியாவின் இரண்டாவது சீடர் எனப் பெருமையாக அழைக்கப்படுகிற புனித பிரான்சிஸ் சவேரியாரின் புனிதப் பாதங்கள் கி.பி. 1544-லேயே பதிந்த புண்ணிய பூமி என்ற வரலாற்றுப் பெருமையும் இதற்குண்டு.

இத்திருத்தலப் பெருவிழா தாய் மரியின் ஆசீருடனும், எம் பேராயர் மேதகு. தோமஸ் ஜெ. நெற்றோ மற்றும் மேதகு துணை ஆயர். கிறிஸ்துதாஸ் அவர்களின் நல்லாதரவுடனும் வெகுச்சிறப்பாய் நடைபெறுகிறது. இவ்விழாவினை மத வேறுபாடின்றி அனைத்து மக்களும் மகிழ்வோடு கொண்டாடி வருகிறோம். மேலும், அனைவரும் ஒன்றாய் நல்லிணக்க விருந்து உண்பது தனிச்சிறப்பு.



உன்னத தாயின் பரிந்துரையால் நலம் பல பெற்று சாட்சிகளாய் அலை அலையாய் திருத்தலம் நாடிவரும் இறைமக்களுடன் நாளும் நடந்த நல்லவைக்கும், அற்புதங்களுக்கும் நன்றி சொல்லவும், இனியெல்லாம் நலமாய் அமையவும் வரம் வேண்டி இறையாசீர் நம்மில் ஊற்றெடுக்க உங்களை வெள்ளிவிழா நிகழ்வில் பங்கு பெற அகமகிழ்வோடு அழைக்கிறோம்.

**இருளகற்றி ஒளிவீசுங்கள்!        வாழுங்கள் அன்னை வழியில்!!**

இவண்:

அருட்பணி. ஷாபின் லீன், பங்கு தந்தை

அருட்பணி. ஸ்டெலின் ஜெசிந்தர், உதவி பங்கு தந்தை

இருபால் துறவற மண்ணின் மைந்தர்கள், அருட்சகோதரிகள், துறவற சபையினர்,
பங்கு பேரவை, பங்கு நிதிக்குழு, பங்கு மக்கள், விழாக் குழுவினர், தூத்தூர் மறைவட்டார மக்கள்.

---

தாயே...
நான் உன்னைச் சந்திக்காவிட்டால்
அந்த இடம்
சொர்க்கமாக இருக்க இயலாது...
உன் படைப்பில் இன்னும்
எதார்த்தம் குறையாத
மழலையின் சிரிப்பு தருவாயா...!
தடுமாறும் வேளையில் தாங்கிப்பிடித்து
என் முன்பே, என் தேவையை அறிவாயா...!
சாதிக்க பிறந்த நாங்கள்
சோதனை கருவிகளாக்கப்பட்டு
துடிக்கும் மீனாய் தரையில் வீழ்ந்த
உணர்வை புரிவாயா...!

யாருமற்ற தனிமையில்
மனதின் காயங்களோடு பயணிக்கையில்
துணைக்கு வருவாயா...!
இளையோரின் சிந்தும் வியர்வை முந்த
பனித்துளி புன்னகைப் பிந்த சுவை நிரம்பி
உலகை கட்டியாள அருள் செய்வாயா...!
அழகு தேவதையாய் வீதியில் நீ வலம் வர
காண்பாவர்களும், தேடுபவர்களும்
உனை வணங்க...
என் உயிர் உள்ளவரை உன்னோடு வாழ
காத்திருப்பேன் வரம் பொழிவாயா...!



**அனைவரும் வருக!    இறையாசீர் பெறுக!!**

**குறிப்பு:**

★ பக்தர்களுக்கு அரசு மற்றும் தனியார் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது.

★ உதவிக்கு: 9487127114, 7598412529, 9442987741, 7598607802, 7200663090, 9488154288, 8110077636, 8667615255

★ திருவழிபாட்டு நிகழ்வுகளை இணையம் மற்றும் நேரடி ஒளிபரப்பில் காணலாம்.

www.thoothoor.com

http://www.facebook.com/ThoothoorCOM

Nila TV

NILA TV நேரடி ஒளிபரப்பில்

## நிகழ்வன

**04-09-2022 ஞாயிறு**

மாலை 5.00 மணி : செபமாலை

மாலை 6.00 மணி : **திருக்கொடியேற்றம்**

திருப்பலித் தலைமை : மேதகு மேனாள் ஆயர். **பீட்டர் ரெமிஜியூஸ்**
கோட்டார் மறைமாவட்டம்



**05-09-2022 திங்கள்**

மாலை 5.00 மணி : செபமாலை

மாலை 6.00 மணி : **திருப்பலி**

திருப்பலித் தலைமை : அருட்பணி. **ஷைன்,** குழித்துறை மறைமாவட்டம்

மறையுரை : அருட்பணி. **மரிய அந்தோனி,** சிவகங்கை மறைமாவட்டம்

**06-09-2022 செவ்வாய்**

காலை 9.00 மணி : தூத்தூர் அரசு மருத்துவமனையுடன் இணைந்து வழங்கும்

**மாபெரும் இரத்ததான முகாம் &**
**காசநோய் நோயாளிகளுக்கு ஊட்டச்சத்து உணவுத் தொகுப்பு வழங்குதல்**

குறிப்பு: சாதி, மத பேதமின்றி அனைவரும் பங்குபெறலாம்.



மாலை 5.00 மணி : செபமாலை

மாலை 6.00 மணி : **சிறப்புத் திருப்பலி**

திருப்பலித் தலைமை : மேதகு ஆயர். **செ. சிங்கராயன்,**
தலைவர், மாதா தொலைக்காட்சி

**07-09-2022 புதன்**

காலை 10.00 மணி :

**திருமுழுக்கு மற்றும் முதல் திருவிருந்து சிறப்புத் திருப்பலி**

குறிப்பு: கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் மட்டுமே பங்கு பெறுவதுடன், தங்கள் பங்கு தந்தையின் உரிய கடிதம் பெற்று வரவும்.

மாலை 6.00 மணி : **மாலை ஆராதனை**



தலைமை : பேரருட்பணி. **வில்பிரட்,**
திருவனந்தபுரம் உயர் மறைமாவட்டம்

மறையுரை : பேரருட்பணி. **ஜோ மிக்ஸ்,**
பாளயங்கோட்டை மறை மாவட்டம்

இரவு 8.00 மணி : **தேர்ப்பவனி**

**08-09-2022 வியாழன்**

காலை 10.00 மணி :

**புனித தோமையார் சமூக நலக்கூடம் திறப்புவிழா**

தலைமை : மேதகு பேராயர். **தோமஸ் ஜெ. நெற்றோ**
திருவனந்தபுரம் உயர் மறைமாவட்டம்



மாலை 5.00 மணி : செபமாலை

மாலை 6.00 மணி : **பெருவிழா திருப்பலி** (தமிழ்)

தலைமை : மேதகு ஆயர். **விசுவாசம் செல்வராஜ்**
அந்தமான் நிக்கோபார் தீவுகள்,
போர்ட் பிலேர் மறைமாவட்டம்

இரவு 8.00 மணி : நல்லிணக்க விருந்து

**இடம்: அரசு மருத்துவமனை மைதானம், தூத்தூர்.**

★ தமிழகம் மற்றும் கேரளாவின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து அருட்தந்தையர்கள் சிறப்பிக்கின்றனர்.

வாழ்வுதரும் கட்டளைகளைக் கேள்;
செவிசாய்த்து ஞானத்தைக் கற்றுக்கொள்.
பாரு 3 : 9

புனித திருமுழுக்கு யோவான்




பங்கு - பூத்துறை

புனித யூதா ததேயூஸ்



பங்கு - சின்னத்துறை



புனித தேவசகாயம்

புனித லூசியாள்



பங்கு - இரையுமன்துறை

தூய மரியன்னை



பங்கு - வள்ளவிளை

புனித கேத்ரினாள்



பங்கு - இரவிப்புத்தன்துறை

புனித நிக்கோலாஸ்



பங்கு - நீரோடி

புனித வியாகுல அன்னை



பங்கு - மார்த்தாண்டன்துறை





செப உதவிக்கு:

புனித தோமையார் மறைவட்டார முதன்மை ஆலயம்,
தூத்தூர். குமரி மாவட்டம், தமிழ்நாடு – 629176.
04651 240640
இணையம் : www.thoothoor.com